இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 356 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆடி 20 – திங்கள்கிழமை 05 ஆகஸ்டு 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 356 : Thiruvalluvar Year - 2055 - Aadi 20 - Monday 05 August 2024 - Dak 12 Pages ₹ 5.00


## முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்றும் நடைமுறைப்படுத்திவரும் மிகப்பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினருக்கான

# 20% இட ஒதுக்கீடுகளால் வன்னியப் பெருமக்களே அதிகம் பயன்பெறுகின்றனர்!

## தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் நிரூபணம்!

**சென்னை, ஆக. 5-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும் நடைமுறைப்படுத்திவரும் மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர்க்கான 20 சதவிகித இட ஒதுக்கீடுகளால்தான் வன்னியப் பெருமக்கள் அதிகமாக பயன் பெறுகிறார்கள் என்பது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது.**

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர்கள் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியம், அனைத்திலும் வன்னியர் சமுதாய இளைஞர்களே அதிகம் தேர்ச்சி பெறுகின்றனர்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் அரசு திட்டங்களால் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் புதிய புதிய திட்டங்களை நடைமுறைபடுத்தியுள்ளார்கள். தமிழ்நாட்டில் பெரும்பான்மையினராக உள்ள சில குறிப்பிட்ட பிரிவினர் பயன்பெற வேண்டும் என்ற அடிப்படையில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், சீர்மரபினர் எனும் ஒரு பிரிவை உருவாக்கி அவர்கள் பயன்பெறும் வகையில் 20 சதவிகித இட ஒதுக்கீடுகளை 1989ஆம் ஆண்டில் வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த 20 சதவிகித இட ஒதுக்கீட்டினை இன்றும் முக்கியத்துவம் அளித்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

அந்த இட ஒதுக்கீட்டு முறை வன்னிய சமுதாய இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கும், மருத்துவம், பொறியியல் கல்லூரிகள் முதலான தொழில் கல்லூரிகளில் சேர்ந்து பயன் பெறுவதற்கும் அதிக அளவில் வழிவகுத்துள்ளது. இதனை தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் வெளியாகியுள்ள புள்ளி விவரங்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளன.



### மருத்துவப் படிப்புகளில் அதிக எண்ணிக்கையில் சேரும் வன்னிய சமுதாய இளைஞர்கள்!

2018 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளுக்கு மொத்தம் 24,330 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களில் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 சதவிகித இட ஒதுக்கீடுகள் மூலம் 4,873 மாணவர்கள் தேர்வானார்கள். இவர்களில் வன்னியர் சமுயதாயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் 2,781 மாணவர்கள். இது 11.4 சதவிகிதமாகும். வன்னியர் தவிர்த்த மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் 5.8 சதவிகித மாணவர்கள் அதாவது 1,414 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 20 சதவிகித பிரிவில் எஞ்சிய சீர்மரபினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 678 பேர்.

2018-2022 ஆண்டுகளில் மருத்துவக் கல்வியில் சேர்ந்த மாணவர்கள் விவரங்களை பாட்டாளி மக்கள் கட்சியினர் வெளியிட்டு, வன்னியர்களுக்கு மட்டும் தனி இட ஒதுக்கீடு வழங்கிடக் கோருவது நியாயமானதே என்றனர். உண்மையில் தமிழ்நாடு அரசு வழங்கிவரும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 20 சதவிகித இட ஒதுக்கீட்டில் வன்னியர்கள் 10.5. சதவீதத்தனை விட கூடுதலாக 13.8 சதவிகிதம் அதாவது 3,354 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து பயன் பெற்றுள்ளனர் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.

### மருத்துவ பட்ட மேற்படிப்பு!

மருத்துவ பட்ட மேற்படிப்புக்கான மொத்த மாணவர்கள் சேர்க்கை இடங்கள் 6,966. இதில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் 1,363 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இவர்களில் வன்னிய சமுதாய மாணவர்கள் மட்டும் 940 பேர் சேர்க்கை பெற்றுள்ளனர். இது 10.5 சதவிகிதத்தினைவிட கூடுதலாக 13.5 சதவிகித வன்னிய மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர் என்பதை தெளிவுபடுத்துகிறது.

### பல் மருத்துவக் கல்லூரிகளில் வன்னிய மாணவர்கள் சேர்க்கை!

பல் மருத்துவக் கல்லூரிகளில் பி.டி.எஸ். பட்டப் படிப்பில் உள்ள மொத்தம் 6,234 இடங்களில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர் மரபினருக்கான இடங்கள் 933. இதில் வன்னியர்கள் 437 பேர். இது 10.7 சதவிகிதமாகும்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற வன்னியர்கள்!

பல் மருத்துவக் கல்லூரிகளில் எம்.டி.எஸ். பட்டப் படிப்பில் உள்ள மொத்த இடங்கள் 751. இவர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த 137 பேர் பல் மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பில் சேர்ந்துள்ளனர். இவர்களில் வன்னியர்கள் மட்டும் 66 பேர். இது மொத்த இடங்களில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின்படி 11.2 சதவிகிதமாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் குரூப்4 தேர்வுகளில் 2012 2022 வரை தேர்ச்சி பெற்று நியமனம் பெற்றவர்கள் 26,784 பேர். இவர்களில் வன்னியர்கள் மட்டும் 5,215 பேர். இது மொத்தம் தேர்ச்சி பெற்றவர்களில் வன்னியர்கள் மட்டும் 19.5 சதவிகிதமாகும்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் குரூப்2 தேர்வுகளில் மொத்தம் தேர்ச்சி பெற்று நியமனம் பெற்றவர்கள் 2,682 பேர். இவர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினரில் மொத்தம் தேர்ச்சி பெற்றோர் 366 பேர். இவர்களில் 20 சதவீதத்தில் இட ஒதுக்கீட்டின் கீழ் பயனடைந்த வன்னியர்கள் மட்டும் 270 பேர். இது மொத்த நியமனங்களில் 11.2 சதவிகிதமாகும்.

### தமிழ்நாடு சீருடைப் பணியாளர் நியமன வாரியம்!

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் நியமன வாரியத்தின் கீழ் 2013-2022ஆம் ஆண்டுகளில், 1,919 பேர் காவல் உதவி ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதில், மிகப் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினருக் கான 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் 605 பேர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் வன்னியர்கள் மட்டும் 327 பேர். அதாவது 17 சதவிகிதத்தினர். இது பாட்டாளி மக்கள் கட்சி கோரும் 10.5 விழுக்காட்டைவிட அதிகம் அல்லவா.

### உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் நியமனத்தில் வன்னியர்கள்!

இதேபோல், 2013 மற்றும் 2022 க்கு இடையில் தமிழ்நாடு மருத்துவ சேவை நியமன வாரியத்தினால் பணியமர்த்தப்பட்ட 8,379 உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்களில், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் 1,433 பேர் நியமனம் பெற்றனர். இவர்களில் வன்னியர்கள் 1,185 பேர். 'இது மொத்த நியமனங்களில் 17.1 சதவிகிதமாகும்.

### மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் நியமனத்தில் வன்னியர்கள்!

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நியமிக்கப்பட்ட 3,044 முதுநிலை ஆசிரியர்களில் 17.5 விழுக்காடு ஆசிரியர்கள், அதாவது 383 பேர் வன்னியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

### துணை ஆட்சியர்கள் நியமனத்தில் வன்னியர்கள்!

2023ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் அடிப்படையில் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் நியமிக்கப்பட்ட 542 துணை ஆட்சியர்களில், 63 பேர் அதாவது 11.6 சதவிகிதத்தினர் வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

### ஒருங்கிணைந்த பொறியாளர்கள் நியமனத்தில் வன்னியர்கள்!

2013 முதல் 2022 வரை 1,789 பொறியாளர்கள் நியமிக்கப்பட்டதில் 258 பேர் வன்னிய சமுதாயத்தினர். இது மொத்த நியமனங்களில் 14.4 சதவிகிதமாகும்.

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தெரியவந்துள்ள புள்ளி விவரங்கள் அடிப்படையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் எனும் புதிய பிரிவை உருவாக்கி 20 சதவிகிதத்தை இட ஒதுக்கீடுகளை வழங்கினார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அன்று வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்றும் நடைமுறைப்படுத்தி வருகின்ற மிகப்பிற்படத்தப்பட்டோருக்கான 20 சதவிகித இட ஒதுக்கீட்டின்கீழ் வன்னிய சமுதாயத்தினர் அதிகமாகவே பயனடைந்து வருகின்றனர் என்பதும், பாட்டாளி மக்கள் கட்சி கோருகின்ற 10.5 சதவிகித இட ஒதுக்கீடுகளால் வன்னிய சமுதாயத்திற்கு குறைவான பயன்களே கிடைக்கின்றன என்பதும் தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

இவ்வாறு தகவல் பெறும் உரிமைச் சட்டம் மூலம் நிரூபணம் ஆகியுள்ளது.

**2018-2022** *ஆண்டுகளில் மருத்துவக் கல்வியில் சேர்ந்த மாணவர்கள் விவரங்களை பாட்டாளி மக்கள் கட்சியினர் வெளியிட்டு, வன்னியர்களுக்கு மட்டும் தனி இட ஒதுக்கீடு வழங்கிடக் கோருவது நியாயமானதே என்றனர். உண்மையில் தமிழ்நாடு அரசு வழங்கிவரும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 20 சதவிகித இட ஒதுக்கீட்டில் வன்னியர்கள் 10.5. சதவீதத்தனை விட கூடுதலாக 13.8 சதவிகிதம் அதாவது 3,354 மாணவர்கள் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து பயன்பெற்றுள்ளனர் என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது.*

**முத்தமிழறிஞர் கலைஞர் தந்த 20 சதவிகித இட ஒதுக்கீடுகளால் -**

**பா.ம.க.கோரும்10.5சதவிகிதத்தைவிடஅதிகம்வன்னியர்கள்பயன்பெற்றுள்ளனர்!**

---

## செயலற்றவர்களாக இருப்பதோடு -

# ஆளுநர்கள் தங்கள் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதில்லை!

## உச்சநீதிமன்ற நீதிபதி கருத்து!

பெங்களூரு, ஆக.5-

ஆளுநர்கள் தங்கள் கடமைகளை முறையாக நிறைவேற்றுவதில்லை என உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னா கருத்து தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் நடைபெற்ற தேசிய சட்ட பல் கலைக்கழக கருத்தரங்கில் உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னா கலந்துகொண்டார். அப்போது, பேசிய அவர், இன்றைய காலகட்டத்தில் சில ஆளுநர்கள் தாங்கள் ஆற்ற வேண்டிய கடமையை செய்யாமல் செயலற்றவர்களாக உள்ளதாகவும், தாங்கள் செய்யக்கூடாத செயல்களை அவர்கள் செய்து வருவதாகவும் தெரிவித்தார். ஆளுநர்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் பதிவாகி வருவது மிகுந்த கவலை அளிப்பதாகவும் நீதிபதி நாகரத்னா கூறினார்.

ஆளுநரின் நடுநிலைமை குறித்து அரசியல் நிர்ணய சபையில் நடந்த விவாதங்களை மேற்கோள்காட்டி பேசிய நீதிபதி நாகரத்னா, ஆளுநர் பதவி நல்லிணக்கத்தின் ஒரு அங்கமாக இருக்கும் என்று நினைத்ததால் அரசியல் அமைப்பின் ஒரு பகுதியாக ஆளுநர் பதவி உருவாக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆளுநர்கள் தமது கடமைகளை உணர்ந்து நன்றாக செயல்பட்டால் முரண்பட்டவர்களிடையே ஒருவித புரிதலையும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

ஆளுநர்கள் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும், கட்சி விவகாரங்களுக்கு ஆளுநர்களை பயன்படுத்தக் கூடாது என்பதே அரசியல் நிர்ணய சபையின் முக்கிய ஆலோசனையாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பலப்படுத்த, அரசியல் சாசன முகவுரையில் குறிப்பிட்டுள்ள கூட்டாட்சி, சகோதரத்துவம், அடிப்படை உரிமைகள், கொள்கை ரீதியான நிர்வாகம் ஆகிய நான்கையும் வலியுறுத்த வேண்டும் என்றும், மாநில அரசுகள் திறனற்றவை என்றோ, கீழ் படிந்தவையாகவோ கருதக்கூடாது என்றும், அரசியலமைப்பின்படி ஆட்சி என்பதே நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் கூறிய நீதிபதி நாகரத்னா, ஆளுநர்கள் ஒருசார்பான, அற்பத்தனமான செயல்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்றும் தெரிவித்தார்.

மாநில ஆளுநர்களுக்கு எதிராக கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், பஞ்சாப் போன்ற மாநிலங்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ள நிலையில் உச்சநீதிமன்ற நீதிபதி நாகரத்னா இக்கருத்துக்களை தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

